# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1782/27 - 2012 ඔක්තෝබර් 31 වැනි බදාදා - 2012.10.31

*1782/27 ஆம் இலக்கம் - 2012 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 31 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### 1974 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டம்

92 ஆம் பிரிவின் கீழான கட்டளை

1974 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டத்தின் 92 ஆம் பிரிவின் கீழ், எனக்களிக்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம், நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சர் தினேஷ் சந்திர ரூபசிங்க குணவர்தன ஆகிய நான், குறித்த சபைக்கு காலி நீர் வழங்கல் திட்டத்தின் கீழ் தானியக்க பம்ப் இயந்திர சாலையினை நிர்மாணிப்பதற்காக காணிப் பகுதியொன்றினை சுவீகரித்துக் கொள்வதற்கான அவசியம் ஏற்பட்டுள்ளமையினால், இங்கு கீழ் குறித்துக்காட்டப்பட்டுள்ள காணிப் பகுதியின் அசையாச் சொத்துரிமையினை சுவீகரித்துக் கொள்வதற்கு இவ் அறிவித்தலின் மூலம் அனுமதி வழங்குகின்றேன்.

தினேஷ் சந்திர ரூபசிங்க குணவர்தன,
நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சர்.

நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சு,
இலக்கம் 35, லக்திய மதுர,
புதிய பாராளுமன்ற வீதி,
பெலவத்தை, பத்தரமுல்லை.
2012, ஒற்றோபர் 26.
5/2/2/982.

#### அட்டவணை

காலி மாவட்டம், காலி பிரதேச செயலாளர் பிரிவில், இலக்கம் 96 சீ கலுவெல்ல கிராம சேவகர் பிரிவில் கலுவெல்ல கிராமத்தில் அமைந்துள்ள கலுவெல்ல ஸ்ரீ வர்தனாராம விகாரை காணி என்றழைக்கப்படும் காணியின் முழு விஸ்தீரணத்தில் 01 பேர்ச்சஸ் அளவான விஸ்தீரணத்தினைக் கொண்ட கீழ் குறிப்பிடப்பட்டுள்ள எல்லைகளுக்குள் அமைந்துள்ள காணிப்பகுதி.

வடக்கு : கல்கெடிய வத்த ;
கிழக்கு : கல்கெடிய வத்த மற்றும் பன்சலை காணி ;
தெற்கு : கல்கெடிய வத்த, எலபொட கல்கெடிய வத்த மற்றும் பன்சலை காணி ;
மேற்கு : ஸ்ரீ புத்தசிங்ஹ வீதி.

உரிமைகோருபவரின் பெயர் மற்றும் முகவரி : 1. விகாரை பொறுப்பாளர்,
ஸ்ரீ வர்தனாராமய,
கலுவெல்ல,
காலி.

11 - 648